எம்.சி.ஓ.பி எண்: 112/2025 தேதி: 08.12.2025

மசா. : 1

பெயர் : சுதாகர்

த/பெ. : ராஜேந்திரன்

வயது : 38

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 18 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து அரியலூர் டூ செந்துறை நெடுஞ்சாலையில் நடந்தது என்றால் சரி. சாலைகை கடக்கும்போது விபத்து நடந்தது என்றால் சரி. சாலையை கடக்க அந்த இடத்தில் வழி இருந்தது. அந்த இடத்தில் சாலைகை கடக்கக் வழியே இல்லை என்றாலும் கடக்கக்கூடாத இடத்தில் நான் கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எலும்பு முறிவு ஏற்படவில்லை. மசாஆ 14 ஆவணத்தில் கடைசில் உள்ள விவரங்களை தவிர்த்து என்னுடைய பெயர், வயதை தவிர எந்த சிகிச்சைக்காக வந்தேன் என்ற விவரமோ, சீல் , கையொப்பம் எல்லா ஆவணங்களிலும் இல்லை என்றால் சரி. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை தொடர் சிகிச்சைக்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த காயத்திற்காக சிகிச்சை பெறுகிறேன் என்ற குறிப்பு மசாஆ 14 ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் கேஸ் கம்பெனியில்வேலை பார்த்தேன். தற்பொழுது வேலைக்கு செல்லவில்லை. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தொழில், வருமானம் மற்றும் வருமான இழப்பை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து மருத்துவ குழுவுக்கு அனுப்பப்பட்ட இயலாமை சான்றில் எனக்கு இயலாமை குறித்து 0 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது என்றாலும் எனக்கு ஊனமோ, இயலாமையோ இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய

அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.